بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 29/07/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 28 அன்னாரது காலத்தில் கிளர்ச்சி செய்த முர்தத்களுக்கு எதிராக அனுப்பப்பட்ட போர்ப்படைகள் பற்றிய குறிப்பு**

أَشۡهَدُ أَنۡ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் காலத்தில் நடைபெற்ற போர்கள் பற்றிக் கூறப்பட்டுக் கொண்டிருந்தது. இன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில், ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் தலைமையில், ஹிஜ்ரீ 12 ஆம் ஆண்டில் ஹீரா, அம்பார் (ஸாத்துல் உயூன்), அய்னுத் தம்ர், தூமத்துல் ஜந்தல், ஹுஸைத் - கனாஃபிஸ், முஸய்யக், சன்னீ - ஸுமைல், ரூஸாப் மற்றும் ஃபிராஸ் ஆகிய இடங்களில் செய்யப்பட்ட போர்களைப் பற்றி எஞ்சிய குறிப்புகள் எடுத்துரைக்கப்படும். அத்துடன் போர்களைப் பற்றிய இந்தக் குறிப்பு இன்று நிறைவடையும்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹீரா வெற்றி பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்கள்:* இந்த வெற்றி, மாபெரும் போர் முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழ்ந்தது. இதனால், முஸ்லிம்களின் பார்வையில், பாரசீகத்தை வெற்றி காண்பதற்கான நம்பிக்கை அதிகரித்து விட்டது. ஏனெனில், ஈராக் மற்றும் பாரசீக அரசாங்கங்களுக்குப் புவியியல் ரீதியாகவும் கண்ணியத்தின் அடிப்படையிலும் இந்த நகரத்துக்கு அதிக முக்கியத்துவம் இருந்தது. ஹீராவை இஸ்லாமிய படையின் மாபெரும் படைத்தளபதி அவர்கள் தமது தலைமையகமாகவும் மையமாகவும் ஆக்கிக் கொண்டார்கள்.

அங்கிருந்து இஸ்லாமிய படைகளுக்குத் ஒன்றுதிரள்வதற்கு, தற்காத்துக் கொள்வதற்கு, ஒருங்கமைப்பதற்கு மற்றும் உதவி புரிதல் ஆகியவற்றிற்கான கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு வந்தன. மேலும், அந்த இடத்தைக் கைதிகளின் விவகாரங்களை முறைப்படுத்துவது பற்றி திட்டம் வகுத்தல் மற்றும் அரசாட்சி ஆகியவற்றிற்கான மையமாக ஆக்கினார்கள். அங்கிருந்து ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஜிஸ்யா வரியையும் மற்ற வரிகளையும் வசூலிப்பதற்காகப் பல்வேறு மாநிலங்களில் அதிகாரிகளை நியமித்தார்கள். அவ்வாறே, எதிரிகளிடமிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக எல்லைகளில் தலைவர்களை நியமித்தார்கள்.

ஈராக்கின் சூழல் சீரமைந்து விட்டது. மேலும், பாரசீக அரசாங்கங்கள் முடிவுக்கு வந்ததனால், பின்னால் இருந்து ஆபத்து ஏதும் இருக்கவில்லை. எனவே, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் நேரடியாக ஈரானைத் தாக்குவதற்கான உறுதியான எண்ணம் கொண்டார்கள். இதற்கிடையிலேயே, ஈரானிய அரசாங்கத்தில் குழப்பமும் அமளியும் ஏற்பட்டு விட்டிருந்தது. இந்த சந்தர்ப்பத்திலிருந்து பயனடைந்தவாறு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவர்களின் மன்னர்களுக்கும் அமீர்மார்களுக்கும் முக்கியஸ்தர்களுக்கும்

இவ்வாறு கடிதங்கள் அனுப்பினார்கள்: இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்! பாதுகாப்பாக இருப்பீர்கள். அல்லது ஜிஸ்யா வரி செலுத்துங்கள்! நாங்கள் உங்களது பாதுகாப்புக்குப் பொறுப்பேற்போம். இல்லையெனில், நினைவில் கொள்ளுங்கள்! உங்களுக்கு மது அருந்துவது எவ்வளவு பிரியமானதோ அந்த அளவு மரணத்தைப் பிரியமானதாகக் கொண்ட ஒரு படையுடன் நான் உங்கள் மீது போர் தொடுத்துள்ளேன். ஹீரா வெற்றியின் மூலமாக, ஈராகை வெற்றி காண்பது மற்றும் அதை இஸ்லாமிய அரசுக்குக் கீழ் கொண்டு வருவது தொடர்பான ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஆசையின் ஒரு பங்கு முழுமை பெற்றது. அது ஈரான் மீது நேரடியாகத் தாக்குதல் தொடுப்பதற்கான முகவுரையாக இருந்தது.

*அம்பார் போர் அல்லது ஸாத்துல் உயூன் (கண்கள்) போரில் எதிரிகள் பின்வாங்கி, கோட்டைக்குள் சென்று அடைந்து கொண்டது மற்றும் அம்பார் உடைய ஆட்சியாளன் ஷீராஸாஸ் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடம் சமரசத்திற்கான கோரிக்கை வைத்தது சம்மந்தமாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:*

இங்கு இதுவும் கவனம் செலுத்த தக்க விஷயம் ஆகும். அதாவது, எந்த வரலாற்றாசிரியரும் வாழ்க்கை வரலாற்று நூலாசிரியரும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மீது, அன்னார் காட்டுமிராண்டித்தனமாகவும் இரக்கமற்ற முறையிலும் நடந்து கொண்டார்கள் என்றும் மக்களைக் கொன்று குவித்துக் கொண்டே சென்றார்கள் என்றும் அவதூறு சுமத்துகிறார்களோ அவர்கள் கவனம் செலுத்தத்தக்க விஷயம் ஆகும். அதாவது, எதிரிகள் கடுமையாகப் போர் புரிந்த போதும், மீண்டும் மீண்டும் முன்வைத்த சமரசத்தையும் ஏற்றுக் கொள்ளாத போதும், எதிரி தோற்றுப் போன பிறகு, அவன் அங்கிருந்து செல்வதற்கு அனுமதி கேட்கிறான். பிறகு, அன்னார் மூன்று நாள்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களையும் உடன் எடுத்துச் செல்வதற்கு அனுமதியும் வழங்கி விட்டார்கள். எந்த விதத்திலும் தடுக்கவில்லை. எனவே, அன்னார் அநீதி இழைத்து வந்தார்கள் என்பது அன்னார் மீது சுமத்தப்பட்ட பழியாகும் என்பதற்கு இது ஆதாரமாகும்.

*அய்னுத் தம்ர் போர் நடைபெற்றது, அதன் கோட்டையை முற்றுகையிட்டது மற்றும் அதன் பொருட்களைப் போர்ச் செல்வங்களாக எடுத்துக் கொண்டது ஆகியவைக் குறித்து விளக்கமாகக் கூறிய வண்ணம் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:*

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் அவர்களின் தேவாலத்திற்குள் நாற்பது ஆண்மக்களைக் கண்டார்கள். அவர்களைக் கிறிஸ்தவர்கள் அடமானமாக ஆக்கி வைத்திருந்தனர். இந்த ஆண் மக்கள் பெரும்பாலும் அரபு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். இந்த ஆண் மக்களுக்கு இஸ்லாமிய வரலாற்றில் முக்கியத்துவம் இருப்பதற்குக் காரணம், அவர்களின் சந்ததிகளில், அந்தக் காலத்திலும் பிற்காலத்தின் வரலாற்றிலும், ஆழமான மற்றும் அழியாத வரைபடத்தை விட்டுச் சென்ற மாமனிதர்கள் தோன்றினார்கள்.

இந்த ஆண்மக்களில் முஹம்மத் பின் ஸீரீன் (ரஹி) அவர்களின் தந்தையார் ஸீரீன் அவர்கள், மூஸா பின் நுஸைர் அவர்களின் தந்தையார் நுஸைர் மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களால் விடுவிக்கப்பட்டிருந்த அடிமை ஹும்ரான் அவர்களும் இருந்தார்கள். ஈராக்கைச் சேர்ந்த ஸீரீன் அவர்கள் மிகப் பெரிய கைத் தொழில் கலைஞராக ஆக இருந்தார்கள். அய்னுத் தம்ர் போரில் கைதானார்கள். ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களின் அடிமை ஆனார்கள். ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களிடம் விடுதலைக்கான உடன்படிக்கை செய்து விடுதலை அடைந்து விட்டிருந்தார்கள். அவர்களின் மகன் புகழ்பெற்ற தாபிஃ ஆவார்கள். அவர்களின் பெயர் முஹம்மத் பின் ஸீரீன் (ரஹி) ஆகும். அவர்கள் தஃப்ஸீர், ஹதீஸ், ஃபிக்ஹ் மற்றும் கனவுகளுக்கு விளக்கம் அளித்தல் முதலிய திறன்களில் இமாமாக இருந்தார்கள்.

பிறகு, பனூ உமய்யாவின் கைதிகளில் ஒருவரான நுஸைர் இருந்தார்கள். இவர்கள் மூஸா பின் நுஸைரின் தந்தையார் ஆவார்கள். இவர்களை பனூ உமய்யாவின் ஒரு நபர் விடுவித்திருந்தார். இவர்கள் தமது மகன் மூஸா அவர்களால் பிரசித்திப் பெற்றுள்ளார்கள். மூஸா பின் நுஸைர் அவர்கள் வட ஆப்ரிக்காவில் புகழ்பெற்றார்கள். தாரிக் பின் ஸியாத் அவர்களுடன் இணைந்து ஸ்பெயினில் இஸ்லாமிய ஆட்சியை ஏற்படுத்துவதில் மிகப் பெரும் பங்காற்றினார்கள்.

பிறகு, யூதர்களைச் சேர்ந்த ஹும்ரான் பின் ஆபான் அவர்களும் அய்னுத் தம்ர் போர்க் கைதிகளில் ஒருவராக இருந்தார்கள். இவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டிருந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இவர்களை விடுதலை செய்து தமக்கு நெருக்கமானவர்களில் ஒருவராகவும் ஆக்கிக் கொண்டார்கள். இவர்கள் ஹிஜ்ரீ 41 ஆம் ஆண்டு சில காலங்களுக்கு பஸராவின் ஆளுநராக ஆனார்கள். பிற்காலத்தில் பனூ உமய்யாவின் ஆட்சியில் பெரும் பெயர் சம்பாதித்தார்கள்.

*தூமத்துல் ஜந்தல் போரின் போது, உகைதரைக் கைதி ஆக்கிக் கொன்றதற்கான காரணங்களைப் பற்றிய குறிப்பில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* 'உகைதரைக் கைது செய்த பிறகு ஏன் கொல்லப்பட்டது?' என்ற கேள்வி எழுகிறது. ஆக, அதற்கான காரணம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: தபூக் போரின் போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை உகைதரிடம் அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவனைக் கைது செய்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவன் மீது கருணைக்காட்டி அவனை விட்டு விட்டார்கள். மேலும், அவனிடம் உடன்படிக்கை எழுத வைத்தார்கள்.

ஆனால், அவன் அதற்குப் பிறகு உடன்படிக்கையை மீறி விட்டான். மதீனாவின் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி செய்து விட்டான். எனவே தான் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவனை சிறைபிடிக்க ஆஸிம் பின் அம்ர் அவர்களை அனுப்பி வைத்தார்கள். அவர்கள் அவனைக் கைது செய்தார்கள். அவனது முந்தைய துரோகத்தின் காரணமாக, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவனைக் கொல்லுமாறு கட்டளையிட்டார்கள். இவ்வாறு அல்லாஹ் அவனை அவனது நம்பிக்கைத் துரோகம் மற்றும் நன்றி மறத்தலின் காரணத்தினால் அழித்து விட்டான்.

பிறகு, ஹுஸைத் மற்றும் கனாஃபிஸ் போர் பற்றிக் கூறப்படுகிறது. ஹுஸைதில் மிகவும் கடுமையான போர் நடை பெற்றது. அல்லாஹ் அரபு அல்லாதவர்களில் பலரைக் கொல்லச் செய்தான். இந்தப் போரில் பெரும் போர்ச் செல்வம் முஸ்லிம்கள் கைவசம் வந்தது. கனாஃபிஸ் போர் பற்றி எழுதப்பட்டுள்ளது: கனாஃபிஸை வெற்றி காண்பதில் இஸ்லாமிய படைக்கு எந்தக் கஷ்டமும் ஏற்படவில்லை.

*முஸய்யக் போர் பற்றிக் குறிப்பிட்டவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இந்தப் போரின் போது, முஸய்யக்கில் வசித்து வந்த இரண்டு முஸ்லிம் போர் வீரர்கள் முஸ்லிம்களால் கொல்லப்பட்டனர். அவர்களிடம் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களால் வழங்கப்பட்டிருந்த பாதுகாப்புப் பத்திரமும் இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அந்த மக்கள் கொல்லப்பட்ட செய்தி கிடைத்ததும், அன்னார் அவர்களுக்கான ஈட்டுத் தொகையை செலுத்தி விட்டார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு அவர்களின் இந்த செயலுக்கான தண்டனை கிடைக்க வேண்டும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் வலியுறுத்திக் கூறினார்கள். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

எந்த முஸ்லிம்கள் எதிரிகளின் மண்ணில் எதிரிகளோடு வசிப்பார்களோ அவர்களுக்கு இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுவது ஒன்றும் பெரிய விஷயம் அல்ல. இவ்வாறு நடக்கத்தான் செய்யும். இருப்பினும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த

மக்களின் பிள்ளைகளை வளர்த்தல் மற்றும் அவர்கள் மீது அக்கறை கொள்வது பற்றி வலியுறுத்திக் கூறவும் செய்தார்கள்.

*சன்னீ மற்றும் ஸுமைலின் போர்களைப் பற்றி எடுத்துரைத்த பின்னர் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் ரூஸாபைக் கைபற்றி விட்டு ஃபிராஸ் எனும் இடத்தை அடைந்தார்கள். இந்தப் பயணத்தில் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்குப் பல போர்கள் எதிர்வந்தன. இங்கு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களால் ரமலான் மாதத்தின் நோன்புகளைக் கூட வைக்க முடியவில்லை. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் இந்தத் திடீர்த் தாக்குதல்கள் மற்றும் கோத்திரங்கள் அன்னாருக்கு எதிரில் இயலாமற் போன செய்திகள் ஈராக் முழுவதும் பரவி விட்டிருந்தன. பாலைவனத்தில் வசித்து வந்த எல்லாக் கோத்திரங்களும் அச்சமடைந்திருந்தன. அவர்கள் முஸ்லிம்களுக்கு முன்னால் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு அவர்களுக்குக் கட்டுப்படுவதிலேயே தமது நலன் இருப்பதாகப் புரிந்தார்கள்.

அய்யாஸ் பின் கனம் (ரலி) அவர்களுக்கு பாக்கியம் இருந்திருந்தால், அவர்கள் ஆரம்பத்திலேயே தூமத்துல் ஜந்தலை வெற்றி கண்டிருந்தார்கள் என்றால், அநேகமாக ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஃபிராஸ் வரைச் சென்றடைந்திருக்க மாட்டார்கள். ஏனெனில், ஈராக் மற்றும் சிரியா முழுவதையும் வெற்றி காண்பது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நாட்டமாக இருக்கவில்லை. அன்னார் அரபு நாட்டோடு இணையும் அந்த இரு நாடுகளின் எல்லைகளில் அமைதி மற்றும் சமாதானம் நிலைபெற்று விட வேண்டும்; மேலும், அந்தப் பகுதிகள் மூலமாக ஈரானியர்களும் ரோமானியார்களும் அரேபியர்கள் மீது தாக்குதல் தொடுக்க முடியாமல் இருக்கட்டும் என்று மட்டுமே விரும்பினார்கள்.

ஆனால், இவ்வீர் அரசாங்கங்களும் முழுமையாக முஸ்லிம்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்து விட வேண்டும் என்பதையே அல்லாஹ் நாடினான். எனவே, அவன் எத்தகைய வழிவகைகளை ஏற்படுத்தி விட்டான் என்றால், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஈராக்கிய கோத்திரங்களைக் கட்டுப்பட வைக்கும் நோக்கத்தில், வடக்கின் கடைசி வரைச் சென்று விட்டார்கள். இவ்வாறு முஸ்லிம்களுக்கு மேற்புறமிருந்து சிரியா மீது தாக்குதல் தொடுப்பதற்கான வழி திறந்து விட்டது. ஃபிராஸில் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் முழுமையாக ஒரு மாதம் வரை தங்க வேண்டி வந்தது. இங்கும் அன்னார் எத்தகைய துணிச்சல், உறுதிப்பாடு மற்றும் நிலைத்திருத்தலை வெளிப்படுத்தினார்கள் என்றால், அதற்கு நிகர் அதுவேதான். அல்லாஹ்வின் வாளாகிய காலித் (ரலி) அவர்கள் ஈராக்கில் தலைமை தாங்கிய போர்களின் கடைசி பிணைப்பாக இது இருந்தது. இதற்குப் பிறகு ஈரானியர்களின் மகத்துவமும் அந்தஸ்தும் மண்ணோடு மண்ணாகிப் போனது. இதற்குப் பிறகு அவர்களுக்கு முஸ்லிம்கள் அச்சமடையும் அளவு போராற்றல் கிடைக்கவே இல்லை!

ஈராக் மீது படையெடுத்தது ஒரு மிகப்பெரும் வெற்றியினுடைய அடையாளமாக இருந்தது. அங்கு முஸ்லிம்கள், எண்ணிக்கை மற்றும் ஆயுத பலத்தில் தம்மை விட எவ்வளவோ வலிமை மிக்கதாக இருந்த பாரசீக படையை, படிப்படியாக நாசமிகு தோல்வி காணச் செய்தனர். பாரசீகப்படை தனது காலத்தில் அனைவரையும் விட அதிகம் அழிவை ஏற்படுத்தக்கூடிய படையாக இருந்ததை நினைவில் கொள்ள வேண்டும்!

ஹஸ்ரத் சித்தீக் (ரலி) அவர்களின் காலத்தின் இம்மாபெரும் பணிக்கு நிகரான ஒன்றை வரலாற்றால் எடுத்து வைக்க இயலாது. போர்க்களத்தில் கிடைத்த அனைத்து வெற்றிகளும் ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி) அவர்கள் மற்றும் அவர்களுடைய தோழர்களான படைத் தளபதிகளின் பேருதவி என்பதில் எந்த சந்தேகமும் கிடையாது!

ஆனால் இந்த வெற்றிகளுக்கும் முன்னேற்றங்களுக்கும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் போன்ற மாபெரும் மனிதருடைய தலைமைத்துவம் கிடைத்திருந்தது என்ற உண்மையையும் மறுக்க இயலாது.

எந்தவொரு படையிலும் எவ்வளவுதான் திறமை வாய்ந்த படைத்தளபதி இருந்தாலும் சரி! அரசாங்கத்தை நிர்வாகிப்பவரின் தனிப்பட்ட சிறப்புகளும் உயர்ந்த நல்லொழுக்கங்களும் அவர் மீது தாக்கத்தை ஏற்படுத்தாத வரை, அந்தப் படைத்தளபதியால் முழு நம்பிக்கையுடனும், சமநிலையுடனும், நன்றியுணர்வுடனும், கலப்பற்ற தன்மையுடனும் பணியாற்ற இயலாது என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது.

முதலாவது கலீஃபா (ரலி) அவர்களுக்கு இஸ்லாமிய வரலாற்றில் ஒரு தனித்துவமான அந்தஸ்து இருப்பது போன்று, வெளிப்பிரதேசங்களை வெற்றி கொண்டு உலகின் அரசியல் மற்றும் மார்க்க வரைபடத்திற்கு புதிய வடிவத்தைக் கொடுப்பதில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுக்கு உதவியாளர்களாக இருந்த பெயர்போன படைத்தளபதிகளுள் அனைவரையும் விட சய்யிதுனா காலித் (ரலி) அவர்கள் முதன்மையானவராக இருந்தார்கள். முஸ்லிம்கள் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் அரசாட்சி மற்றும் ஆன்மீக வழிகாட்டலின் கீழ், சய்யிதுனா காலித் (ரலி) அவர்களின் படை தலைமைத்துவத்தின் மூலமாக, ஈராக்கின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலை வரை ஒரு சூறாவளியைப் போன்று பரவி விட்டனர். அவர்கள் இதைப்போன்றே இன்னொரு பேரரசை வெற்றி கொள்ள இருந்தனர். மேலும், அது கிழக்கத்திய ரோம் ஆக இருந்தது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் அவர்களின் காலத்து விஷயங்களில் கொஞ்சம் பகுதி எஞ்சியுள்ளது. அது இனிவரும் காலத்தில் எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்.

*குத்பா சானியாவுக்கு முன் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* அடுத்த ஜுமுஆ அன்று U.K ஜமாஅத்தின் ஆண்டு மாநாடும் ஆரம்பிக்கிறது. இன் ஷா அல்லாஹுத் தஆலா! அல்லாஹ் இந்த மாநாட்டை எல்லா விதத்திலும் அருளுக்குரியதாக ஆக்குவதற்காக துஆ செய்யுங்கள்!

கலந்து கொள்ள வரக்கூடியவர்களின் பயணமும் நல்ல விதமாக அமையட்டுமாக! டியூட்டி கொடுக்கக் கூடியவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள்! அவர்கள் தமது கடமைகளை சரியாகச் செய்வதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக! ஏனென்றால் இரு வருட, மாறாக, மூன்று வருட இடை வெளிக்குப் பிறகு (கடந்த வருடம் நடைபெற்றது. ஆனால் சிறிய அளவில் நடைபெற்றது.) முழுமையான முறையில் பெரிய மாநாடு இப்பொழுது நடைபெறுகிறது. ஆகவே சில சிரமங்களும் இருக்கும். நிர்வாக ரீதியாக உள்ள சிரமங்களாக இருந்தாலும் சரி! அல்லது வேறு எந்த ஒரு வகையில் சிரமங்கள் உருவானாலும் சரி! அல்லாஹ் அவற்றை நீக்கிவிடுவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا
مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ
وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ
وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ ـ

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**